## அலவ்வ பிரதேச சபை
## குருநாகல் மாவட்டம்

-----------------------------------

1. **நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 23 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 30 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஜூலை 14 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் அலவ்வ பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

46-0524 ஆம் இலக்க டேலரின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

மீளாய்வாண்டின் இறுதியில் 07 கணக்கு விடயங்களுக்குரிய காணப்பட்ட மீதிகள் மற்றும் தொடர்புடைய துணைப் பதிவேடு இடையே ரூபா 4,329,523 ஆன இணக்கமின்மை காணப்பட்டது.

**1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

நிலையான சொத்துக்கள் பதிவேட்டின் பிரகாரம் ரூபா 361,400 பெறுமதியான 14 காணித் துண்டுகளுக்காக உரித்து உறுதிகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணக்கமின்மை**

பின்வரும் சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்கள் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம் | |
| (i) 16 ஆம் பிரிவு | ஆதன ஆவணமொன்றோ அல்லது வேறு ஏதேனும் முறையான கையேற்பு ஒன்றில்லாமல் வெலிகதர மற்றும் கிரிமானாபொல சிகிச்சை |

நிலையங்களுக்கு மின்சாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக ரூபா 43,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

| | |
|---|---|
| (ஆ) பிரதேச சபை (நிர்வாக மற்றும் நிர்வாகம்) 218 ஆம் விதி | நாரம்மல மற்றும் அலவ்வ பிரதேச சபை வேறாக்கப்பட்ட போது அலவ்வ பிரதேச சபைக்குப் பெற்றுக்கொண்ட காணி மற்றும் கட்டிடங்கள் பௌதீக ரீதியில் பரீட்சிக்கப்பட்டு உள்ளவாறான தன்மையை உறுதிப்படுத்தாமல் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. |

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள்

| | |
|---|---|
| (i) நிதிப்பிரமாணம் 396 (ஈ) | வழங்கப்பட்டு 06 மாதங்கள் கடந்த ரூபா 38,670 ஆன 09 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை |
| (ii) நிதிப் பிரமாணம் 1646 | 10 வாகனங்களுக்குரிய நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் முறையாக கணக்காய்விற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்க வில்லை. நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் முறையாக கணக்காய்விற்கு அனுப்பி வைக்கப்படாத காலப் பகுதியில் 5675 லீற்றர் எரிபொருளுக்காக ரூபா 539,190 தொகை செலவிடப்பட்டிருந்தது. |

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 9,349,140 ஆக காணப்பட்டதுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் வருமானத்தை மிகைத்த மீண்டுவரும் செலவினம் ரூபா 80,822 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 9,429,962 ஆன அதிகரிப்பொன்று காணப்பட்டது. இந் நிதி விளைவிற்கு ரூபா 3,138,299 ஆன மூலதன உதவி மற்றும் ரூபா 9,529,535 ஆன உபகரண செலவுகளை சீராக்கல் மேற்கொண்ட போது மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 2,957,904 ஆன மிகையொன்றாக மாறியுள்ளது.

## 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரிய உள்ளவாறான வருமானம், செலவினம் மற்றும் உரிய முரண்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | வருமான மூலம் | 2015 | 2014 | முரண் | செலவின விடயம் | 2015 | 2014 | முரண் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | வருமானம் | | | | செலவினம் | | |
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) | உழைத்த வருமானம் (10,20,30,40) | 13,656 | 12,306 | 1,350 | தனிப்பட்ட வேதனம் | 50,045 | 35,436 | 4,609 |
| (ii) | ஏனையவை (50,60,70) | 59,608 | 35,304 | 24,304 | ஏனையவை | 13,870 | 12,254 | 1,616 |
| | உப மொத்தம் | 73,264 | 47,610 | 25,654 | உப மொத்தம் | 63,915 | 47,690 | 16,225 |
| (iii) | மூலதன வருமானம் | 3,138 | 16,446 | (13,308) | மூலதன செலவினம் | 9,529 | 18,730 | (9,201) |
| | மொத்தம் | 76,402 | 64,056 | 12,346 | மொத்தம் | 73,444 | 66,420 | 7,024 |
| | செயற்பாட்டு விளைவு | 9,349 | (80) | 9,429 | மிகை | 2,958 | | 5,323 |
| | | | | | பற்றாக்குறை | | (2,365) | |

(அ) மீளாய்வாண்டிற்கான சபையின் மொத்த மீண்டுவரும் வருமானமாகிய ரூபா 73,264,099 தொகையில் 81 சதவீதம் அதாவது ரூபா 59,608,411 தொகையும் சபையினால் உருவாக்கப்பட்ட வருமானம் அல்லாத நீதிமன்றத் தண்டப் பணம், முத்திரைக் கட்டணம், சம்பள மீளளிப்பு போன்ற படிகள் தன்மையுள்ள பெறுவனவுகளினை கொண்டிருந்தன.

(ஆ) மூலதன வருமானமாகிய ரூபா 3,138,299 ஆன மொத்தத் தொகையும் கமநெகும, மகநெகும போன்ற மூலங்களின் மீது வேறு நிறுவனங்களின் மூலம் அதிகாரப் பிரதேசத்தில் அபிவிருத்தி விடயங்களுக்காக வழங்கியிருந்த பணத்தை உள்ளடக்கியிருந்தன.

(இ) மீளாய்வாண்டிற்கான மொத்த மீண்டுவரும் செலவினமாகிய ரூபா 63,914,959 தொகையில் 78 சதவீதம் அதாவது ரூபா 50,045,196 தொகை தனிப்பட்ட சம்பளத்திற்காக செலவினமாக இருந்ததுடன், அவற்றில் 77 சதவீதம் அல்லது ரூபா 38,799,029 சம்பள மீளளிப்பாக உள்ளூராட்சி ஆணையாளரிடம் இருந்து கிடைக்கப்பெற்றவை ஏனைய வருமானத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) மூலதனச் செலவினமான ரூபா 9,529,535 தொகையில் 47 சதவீதம் அதாவது ரூபா 4,497,890 தொகை மாத்திரம் சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்ததுடன் எஞ்சிய 53 சதவீதமான ரூபா 5,316,645 தொகை

கமநெகும, மகநெகும ஆகிய மூலங்களின் மீது வேறு நிறுவனங்களின் ஏற்பாடுகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி விடயங்களை உள்ளடக்கியுள்ளது.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

**மதிப்பிடப்பட்ட வருமானமும் உள்ளபடியான வருமானமும்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரிய மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம், செலவினம் மற்றும் நிலுவை வருமானம் என்பன கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | 2015 மதிப்பிடப் பட்டது | 2015 உள்ளவாறான | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரட்டிய பற்றாக்குறை | 2014 மதிப்பிடப் பட்டது | 2014 உள்ளவா றான | 2014 திசெம்பர் 31 இல் உள்ளாறு திரட்டிய பற்றாக்குறை |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) வீதவரியும் வரியும் | 3,244 | 2,767 | 1,403 | 8,015 | 3,127 | 1,138 |
| (ii) குத்தகை வாடகை | 8,306 | 7,610 | 13 | 8,441 | 7,250 | 19 |
| (iii) அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 764 | 1,604 | - | 765 | 665 | - |
| (iv) ஏனைய வருமானம் | 40,959 | 59,268 | 17,788 | 37,561 | 36,567 | - |
| மொத்தம் | 53,273 | 71,249 | 19,204 | 54,782 | 47,609 | 1,157 |

### 2.3.2 பட்டியலிடப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | 2015/01/01 இல் நிலுவை | ஆண்டில் பட்டியலிட்டது | மொத்தம் | 2015/01/01 இல் நிலுவை | வருமான சேகரிப்பு பட்டியிலிடப்பட்ட வருமானத்தில் சேகரித்த வருமானம் | மொத்தம் | 2015/01/01 இல் நிலுவை | நிலுவை மீதி பட்டியிலிடப்பட்ட வருமானத்தில் சேகரித்த வருமானம் | 2015/12/01 இல் நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா. 000 | | | | | | | | |
| வீதவரி மற்றும் வரி( | 1,138 | 3,031 | 4,169 | 309 | 2,219 | 2,528 | 829 | 812 | 1,641 |
| வாடகை | 19 | 7,604 | 7,623 | 11 | 7,598 | 7,609 | 8 | 6 | 14 |
| அனுமதிப்பத்திர கட்டணங்கள் | - | 1,604 | 1,604 | - | 1,604 | 1,604 | - | - | - |
| ஏனைய வருமானம் | - | 59,268 | 59,268 | - | 59,268 | 59,268 | - | - | 17,788* |
| | 1,157 | 71,507 | 72,664 | 320 | 70,689 | 71,009 | 837 | 818 | 19,443 |

* சம்பள மீள் நிரப்பல் செய்யப்படாமையால் 2015 திசெம்பர் 31 இல் நிலுவை

### 2.3.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

----------------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் இருந்து ரூபா 1,862,125 தொகை நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் ரூபா 14,406,276 தொகை முத்திரைக் கட்டணம் பெற வேண்டியதாக காணப்பட்டன.

(ஆ) பெற வேண்டிய முத்திரைக் கட்டண வருமானத்தில் 75 சதவீதம் அல்லது ரூபா 10,809,124 தொகை 2013 ஆம் ஆண்டிற்குரியதாக இருந்தது.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் பெறவேண்டிய நீதி மன்றத் தண்டப்பணம் ரூபா 1,862,125 ஆக இருந்ததுடன், அதில் 2014 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 194,625 உம் காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப்பணத்தில் 36 சதவீதம் அல்லது ரூபா 493,878 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது.

### 2.3.4 வீதவரி

--------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது அலவ்வ பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் 4214 வீத வரி அலகுகளுக்காக ரூபா 1,972,741 பட்டியிலிடப்பட்டிருந்ததுடன், 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை ரூபா 1,379,227 ஆக இருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதி வரையில் அரசு மற்றும் இணைந்த மூன்று நிறுவனங்களிடமிருந்து ரூபா 140,952 தொகையும், தனியார் நிறுவனங்கள் மற்றும் குடியிருப்பாளர்களிடமிருந்தும் ரூபா 353,145 ஆன நிலுவை வீதவரி மற்றும் வரிகளாகவும் ரூபா 494,097 தொகை 4 ஆம் காலாண்டிலிருந்து 52 வரையான காலமாக அறவிடப்பட வேண்டியிருந்தது.

(இ) சபைக்கு செலுத்தப்பட வேண்டிய வீதவரி உரிய காலஎல்லைக்குள் செலுத்தப்படாத போது 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 158 (1) (அ) (ஆ) பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயலாளரால் கையொப்பமிடப்பட்ட அனுமதிப்பத்திரமொன்றின் பேரில் வெளிக்களத்தில் வரி சேகரிப்பு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், வருடம் பூராகவும் வீதவரி, வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம், கடை வாடகை மற்றும் குத்தகை வாடகை போன்ற வருமானம் வெளிக்களத்தில் சேகரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.5 தொடர்பால் கோபுர வருமானம்

---------------------------------------------------------

இலங்கை குடியரசின் 2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய 1597/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் பிரதேசத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள தொலைபேசி சமிக்ஞை கோபுரங்களுக்குரிய முன்னுரிமைக் கட்டணம், இணக்கச் சான்றிதழ் வழங்கல் தொடர்பான கட்டணங்கள் மற்றும் அத்துமீறிய நிர்மாணம் தொடர்பாக சபைக்கு அறவிடப்பட வேண்டிய கட்டணங்கள் என்பன அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 03. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல் மதிப்பீடு

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை முச்சக்கர வண்டிக் கட்டண வருமானம் ரூபா 159,600 ஆக இருந்தது.

(ஆ) அலவ்வ நகர மண்டப திருத்த வேலைகள் தாமதமான காரணத்தினால் மீளாய்வாண்டில் நகர மண்டபத்தை வாடகைக்கு வழங்குவதால் உழைக்க கூடியதாக இருந்த வாடகை வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

### 3.2 முகாமைத்துவ திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) வருமான பரிசோதகர் பதவியில் சேவையில் ஈடுபட்டுள்ள நான்கு உத்தியோகத்தர்களின் கடமைப் பட்டியலின் பிரகாரம் அவர்களால் அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டிய நிறுவனங்களை கணிப்பிடல், வீதவரி அறிவித்தல்களை வழங்குதல், அனுமதியற்ற நிர்மாணங்களை அறிக்கையிடல் போன்ற கடமைகளிலிருந்து அநேகமாக விலகியிருந்ததுடன் வீதவரி, வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணங்கள், மற்றும் வாடகை வருமானம் என்பவற்றில் வெளிக்களத்தில் சேகரித்தல் அவர்களால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இப்பணம் ஆட்களால் சபைக்கு வருகை தந்து செலுத்த வேண்டியிருந்ததுடன் செயலாளரால் விநியோகிக்கப்படும் பிடிவிராந்தின் பேரில் மாத்திரம் வெளிக்களத்தில் வருமானம் சேகரிக்கப்பட வேண்டிய போதிலும், குறித்த உத்தியோகத்தர்கள் அவ்வாறான கையளிப்பு இல்லாமல் ஆண்டுபூராகவும் வெளிக்களத்தில் பணம் சேகரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2007 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டு வரை சபைக்கு கிடைக்கப் பெற்றிருந்த ரூபா 1,357,110 ஆன 82 நானாவித வைப்பு மீதிகள் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 முகாமைத்துவ திறமையின்மை

ஓய்வுபெறல், இடமாற்றம் பெற்றுச் செல்லல், சேவைக்கு வருகை தராமை போன்ற காரணங்களின் பேரில் 6 – 8 வருடங்கள் வரையான காலப்பகுதியில் அறவிடப்படாமல் காணப்படும் மீதிகள் ரூபா 119,378 ஆக இருந்தது.

### 3.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்

சபைக்குச் சொந்தமான PC - 0366 ஆம் இலக்க கெப் வண்டி 2014 நவம்பர் 17 ஆந் திகதி விபத்திற்குட்பட்டிருந்தது. அவ்வாகனம் தனியார் நிறுவனமொன்றின் ஊடாக ரூபா 95,943 இற்கு திருத்தம் செய்யப்பட்டிருந்ததுடன், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் ரூபா 67,986 மாத்திரம் கொடுப்பனவு செய்யப்பட்ட காரணத்தினால் சபைக்கு ரூபா 27,957 ஆன நிதி நட்டம் ஏற்பட்டிரந்தது.

## 4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 4.1 பயன்படுத்தப்படாத மற்றும் குறைபயன்பாட்ட சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டுள்ள ரூபா 1,421,278 பெறுமதியான இரண்டு சொத்து விடயங்கள் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டன.

(ஆ) மீளாய்வாண்டில் பிரதேச சபைகளை பலப்படுத்துதல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 550,000 செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 10 விற்பனை கூடங்களில் ரூபா 330,000 பெறுமதியான 06 விற்பனை கூடங்கள் உரிய நோக்கங்களுக்கு பயன்படுத்தாமல் சபை வளவில் வைக்கப்பட்டிருந்தன.

**4.2 தீர்வுசெய்யப்படாத பொறுப்புக்கள்**

பிரதேச சபையில் சேவை புரிந்து ஓய்வுபெற்றுள்ள உள்ளுராட்சி மன்ற ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்புத் தொகை செலுத்த வேண்டிய ஊழியர்களுக்காக சபையால் செலுத்தப்பட வேண்டிய பங்களிப்புத் தொகை முறையாக செலுத்தப்படாமையால் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்நிதியத்திற்கு செலுத்த வேண்டிய மீதி ரூபா 8,020,699 ஆக இருந்தது.

**05. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்